**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசியசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசியசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசியசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- தேசியசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசியசபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தேசியசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தேசியசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன்

நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது. பொதுப்பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு ஆகிய முக்கிய கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளன.

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா. | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இறுதிக் கணக்குகளின் படி 07 தொகுதிகள் தொடர்பாக நிலையான சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக அதற்குரிய விரிவான அட்டவணை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதற்கு நேரொத்த பெறுமானத் தேய்வு பெறுமதிகளின் உண்மைத் தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. | 4,385,243 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் | நிலையான சொத்துக்கள் பதிவேடு சபையிடம் காணப்படவில்லை என. ஆரம்ப மீதிக்கு புதிய கொள்வனவுகள் சீராக்கல் செய்யப்பட்ட பெறுமதி 2023 இறுதிக் கணக்குகளில் உட்படுத்தப்பட்டது எனவும், அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து நாளதுவரை ஆக்கப்பட்ட பெறுமதி இனங்காண்பதற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | சேதங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | தற்போது சேதங்கள் தொடர்பாக பதிவேடொன்று | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க |

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டு வராததுடன், எதிர் காலத்தில் சேதங்கள் தொடர்பான பதிவேடு தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சேதங்கள் பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 132,698,921 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 69,109,561 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 63,589,360 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக சபையின் வருமானம் ரூபா 39,393,827 தொகையினால் அதிகரித்திருந்ததுடன், மீளாய்வாண்டின் சபையின் காப்புறுதி வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம் முறையே ரூபா 2,029,775 இனால் மற்றும் ரூபா 37,364,052 இனால் அதிகரித்தல் இதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் செலவுகள் ரூபா 24,195,533 இனால் குறைந்திருந்ததுடன், அதற்காக வீதி பாதுகாப்பு முகாமைத்துவச் செலவு மற்றும் நிறுவனத்தின் நிருவாகச் செலவு முறையே ரூபா 21,630,273 இனால் மற்றும் ரூபா 2,565,260 இனால் குறைவடைதல் அதற்கான பிரதானமான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 திசெம்பர் 12 திகதிய பாராளுமன்ற விஷேட குழுவின் பாராளுமன்ற வெளியீட்டு தொகுதி இலக்கம் 351 இன் பிரிவு 10.6 இன் படி நாட்டின் பாதைகளின் பாதுகாப்பு மிகவும் சிறந்த முறையில் முகாமைத்துவப் படுத்துவதற்காக இந்த நிறுவனம் தேசிய ஆணைக்குழு ஒன்றாக நியமனம் செய்யப்பட்டு அதற்கு தேவையான அதிகாரங்கள் மற்றும் ஆற்றல் நிதி வளங்கள் வழங்குதல் ஆணைக்குழுவின் அலுவல்களுக்கு உதவுவதற்காக உயர் தகைமைகளையுடைய பயிற்சி பெற்ற பதவியணியொன்றை கொண்ட முழுமையான செயலகம் ஒன்று நிறுவப்படாமல் மேற்கொள்ள | ஆணைக்குழுவொன்றாக ஆக்குவதற்காக தேவையான இறுதி சட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்த கருமத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. அந்தச் சட்ட வரைபு 2024 ஆண்டில் மீண்டும் சட்டவரைஞருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபைக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் 05 அபிவிருத்தி | வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய ஆணைக்குழு நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டியிருந்த போதிலும், மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு இணங்க இதுவரை இந்த நிறுவனம் ஆணைக்குழு என நிறுவப்பட்டிருக்காத ஆகிய காரணங்களினால் இந்த சபையின் அலுவல்களை நிறைவேற்றுவதற்காக முறையான சட்ட அதிகாரம் ஒன்று கிடைத்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள், பணிப்பாளர் ஒருவர், உதவிப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் கணக்காளர் என பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 2245/31 மற்றும் 2021 செப்தம்பர் 17 திகதிய அதிவிஷேட வர்த்தமானிக்கு இணங்க 14 காப்புறுதி நிறுவனங்களினால் அனுப்பப்பட்டிருந்த ரூபா 74,206,951 தொகை காப்புறுதி வருமானத்தின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாட்டுச் செய்முறையொன்று முகாமைத்துவத்தினால் தயாரித்திருக்கவில்லை. | இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழு மற்றும் காப்புறுதி நிறுவனங்களுக்கு சொந்தமான காப்புறுதி பங்களிப்புக்குரிய தகவல்கள் காணப்படாமையால் அந்த நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் சபையின் மூலம் காப்புறுதி நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த படிவம் குறிப்பிட்ட நிறுவனத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் அல்லது பிரதான நிதி உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டொன்றுடன் மாதாந்தம் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனங்களினால் அனுப்பப்படுகின்ற பணத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய முறையில் உள்ளகக்க கட்டுப்பாட்டுச் செய்முறையொன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | 2021 பெப்ரவரி 10 திகதிய அரச கணக்குக் குழுவினால் வழங்கியிருந்த கட்டளையின் படி நிறுவனத்தினால் மிகை வேகத்தின் காரணமாக ஏற்படுகின்ற பாதை விபத்துக்களை குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் 2021 ஆண்டு முதல் செயற்படுத்துவதற்கு குறிப்பிட்ட பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்திருக்காமையால் மூன்று வருடங்கள் கடந்திருந்த போதிலும் குறிப்பிட்ட கட்டளையை செயற்படுத்தியிருக்கவில்லை. | 2021, 2022, 2023 ஆண்டுகளின் செயல் நடவடிக்கை திட்டங்களில் அடங்கியிருந்த ரூபா 150 மில்லியனிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த இலங்கை பொலிசுக்கு தேவையான வேகமாணிகள் உட்பட தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்குவதற்கான செயற்திட்டத்திற்காக அரச கணக்குக் குழுவின் கட்டளையை இரத்துச் செய்யும் எதிர்பார்ப்புடன் 2023 திருத்திய செயல் நடவடிக்கைத் | கணக்குக் குழுவின் கட்டளையை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டத்தின் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2014 பெப்ரவரி 17 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 (4)(ஈ) பிரிவிற்கு இணங்க நிறுவனத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பெறுகைத் திட்டத்தில் ரூபா 120 மில்லியன் பெறுமதியான 31 தொழிற்பாடுகளை செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 52 மில்லியன் தொகை பெறுமதியான 20 பெறுகை கருமங்களின் எந்த செயலாற்றுகையும் அறிவிக்கப்பட்டிருக்காததுடன், மேலும் 11 பெறுகைத் தொழிற்பாடுகள் எதிர்பார்த்த இலக்காகிய குறிக்கோளை திட்டமிட்டவாறு நிறைவேற்றியிருக்கவில்லை எனவும் அதன் நிதிச் செயலாற்றுகை சராசரி 10 சதவீதம் மாத்திரம் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டமையால் நிறுவனத்தினால் 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டம் செயற்திறனுடன் செயற்படுத்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | தலைவர் பதவி 2023 ஆண்டின் போது மூன்று தடவைகள் மாற்றப்படாத காரணத்தினால் நிலைமைகள் 2023 செயல் நடவடிக்கைத் திட்டம்,பெறுகைத் திட்டம் மற்றும் பாதீடு திருத்தப்பட்டதுடன், அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அந்த அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்துகொள்வதற்கு முடியாமல் போனதால் புதிய திருத்தங்களை உட்படுத்தி 2024 செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் பாதீடு தயாரிக்கப்பட்டது. 2024 ஆண்டின் போது எதிர்பார்க்கப்படுகின்ற செயலாற்றுகையை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | பெறுகைத் திட்டங்கள் தத்துரூபமாக காணப்பட வேண்டியதுடன், நிறுவனத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை நெருங்குவதற்கு அதன் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக திறைசேரியின் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் இதுவரை இந்த நிறுவனம் ஆணைக்குழு ஒன்றாக நிறுவப்பட்டிருக்காமையால் போக்குவரத்து அமைச்சின் 14 உத்தியோகத்தர்கள் அடங்கிய | ஜனாதிபதி செயலகத்தின் ஆலோசனையின் படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆணைக்குழு ஒன்றாக ஆக்குதல் நியமனம் தொடர்பான இறுதி சட்ட வரைபு 2024 ஆண்டின் போது மீண்டும் சட்ட வரைஞருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், வீதிப் பாதுகாப்பு தொடர்பான | சபையக்குத் தேவையான முழு நேர அடிப்படை பதவியணி ஒன்று அங்கீகரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணி ஒன்று இணைக்கப்பட்டு குறிப்பிட்ட கருமங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | தேசிய சபைக்கான முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் முறையே அபிவிருத்தி உத்தியோகத்தர் 05 பேர், பணிப்பாளர் ஒருவர், உதவிப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் கணக்காளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 05 தூண்களின் (Pillars) கீழ் செயற்படுத்த வேண்டிய ரூபா 110 மில்லியன் தொகை பெறுமதியான 22 செயற்திட்டங்களுக்குரிய 35 கருமங்கள் இனங் கண்டு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 55 மில்லியன் பெறுமதியான 21 கருமங்கள் அதாவது 50 சதவீதம் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சபையின் தலைவர் பதவி அடிக்கடி மாற்றமடைந்ததுடன் 2023.06.16 திகதி தேசிய சபைக் கூட்டத்தில், சபையின் 2023 செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் பாதீடு திருத்தப்பட்டவுடன் அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதன் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்தவாறு கருமங்களை பூர்த்தி செய்ய முடியாமல் போனமையால் அந்த திருத்தங்களைச் சேர்த்து 2024 இன் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டம் தத்துரூபமாக காணப்பட வேண்டிதுடன், திட்டமிட்டவாறு அதில் அடங்கிய கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 55 மில்லியன் தொகைக்கான 09 செயற்திட்டங்கள் தொடர்பாக 14 கருமங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 25 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்களின் செயலாற்றுகை 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2023 திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கிய செயற்திட்டங்களுக்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதன் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்தவாறு கருமங்கள் பூர்த்தி செய்யப்படாமையால் அந்தத் திருத்தங்களையும் சேர்த்து 2024 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2024 ஆண்டின் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அலுவல்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போது மிகவும் செயற்திறனுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தின் செயலாற்றுகையை நெருங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (இ) | 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கான நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதன் கீழ் ரூபா 2,650,000 இற்கான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு துவிச்சக்கர வண்டிகள் ஒட்டுவதற்காக பிரதிபலிப்பு ஸ்டிகர்கள் அச்சிடுவதற்காக நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இனங்காண முடியாத அத்தியவசியமானவை என செயற்படுத்த வேண்டிய செயற்திட்டங்களுக்கான யோசனைகள் சமர்ப்பிக்கப்பட போது அதன்படி, செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்தி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,650,000 தொகை பெறுமதியான ஸ்டிகர்களை வினியோகிக்கும் அலுவல்கள் விரைவாக மேற்கொள்வதை எதிர்பார்த்து அந்த செயற்திட்டத்தை செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து அகற்றியிருந்த போதிலும் அந்த கருமம் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் அந்த செயற்திட்டம் 2024 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டது. | இனங்காணப்பட்ட அத்தியவசியமான புதிய செயற்திட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தி அங்கீகாரத்துடன் செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | வீதிப் பாதுகாப்பு தொடர்பாக காணப்படும் புத்தகங்கள் மற்றும் ஏனைய தகவல்களை பயன்படுத்துவதற்காக 2005 ஏப்ரல் 04 திகதிய இலக்கம் 1387/4 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி 2(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்பு விடயம் தொடர்பான நூலகம் ஒன்று நடாத்திச் செல்வதற்காக 2017 ஆண்டு முதல் திட்டமிடப்பட்டிருந்தது. அதேபோல் 2021 ஆண்டின் போது அது ஈ-நூலகம் ஒன்றென ரூபா 570,000 கிரயமொன்றுடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், 2023 ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்த பிரேரணைக்காக ரூபா 0.7 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு மூன்று தொழிற்பாடுகளின் கீழ் ஈ-நூலகத்தை | 2021 ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்த சபையின் இலத்திரனியல் நூலகத்தை நாளதுவரை ஆக்கல் மற்றும் அது தொடர்பாக பொது மக்களை அறிவுருத்தலுக்கான செயற்திட்டமொன்று 2023 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2023 திருத்திய செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிருக்காமையால் ஏற்பட்டிருந்த வழுவினை இனங்கண்டு அதனை 2024 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டதுடன், இலத்திரனியல் நூலகம் நிறுவப்பட்ட குறிக்கோள் | திட்டத்தின் தொடர் அலுவல்கள் முறைப் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இந்த திட்டம் அகற்றப்பட்டிருந்தது. அதன்படி, ஈ-நூலகம் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றக் கூடியவாறு 2024 ஆண்டின் போது அதனை நாளதுவரை ஆக்குவதற்கும் அது தொடர்பாக பொது மக்களை போதியளவு அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) 2022 ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் தூண் 01 இன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த ''மோட்டார் சைக்கிள் விபத்துக்களை குறைத்தல்'' இற்கான ஆய்வொன்று 04 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு 2022 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக வெளித்தரப்பினர் ஒருவருக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி சாட்டப்பட்டிருந்தது. 2023 ஆண்டின் போது அவற்றில் 2 கட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை ஒன்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை ஆய்வின் மீதியான 2 கட்டங்களையும் செயற்படுத்துவதற்காக முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்ததுடன், அதற்காக இதுவரை மேற்கொண்டிருந்த ரூபா 700,000 இற்கான தொகை விளைவற்று இருந்தது. மேலும், செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் நிச்சயமற்ற தன்மை நிலைமையொன்று மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறியது தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆய்வு கருமங்களின் 2 கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதன் அறிக்கை வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு கிடைத்திருந்தவுடன், 2024 ஆண்டின் போது குறிப்பிட்ட தரப்பினரால் மீதியான இரண்டு அறிக்கைகளில் ஒரு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைக்கள் அமைச்சுச் செயலாளரிடம் வினவி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உடன்படிக்கை மீறல் தொடர்பாக உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஆய்வினை முழுமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் காட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் மதிப்பீட்டு மொத்த வருமானம் மற்றும் மூலதனச் செலவு முறையே ரூபா 114 மில்லியன் மற்றும் ரூபா 119 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், உள்ளவாறான வருமானம் ரூபா 170 மில்லியன் மற்றும் உள்ளவாறான | வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் 2023 பாதீடு ஆகஸ்ட் மாதத்தில் திருத்தப்பட்டதுடன், திருத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், எதிர்பார்த்தவாறு கருமங்களை பூர்த்தி | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| மூலதனச் செலவு ரூபா 28 மில்லியனாக காணப்பட்டமையால் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே ரூபா 56 மில்லியனிற்கான அதாவது 49 சதவீதம் நேர் முரண் ஒன்றும் மதிப்பீட்டு மூலதனச் செலவு மற்றும் உள்ளவாறான செலவிடையே ரூபா 91 மில்லியன் தொகை அதாவது 76 சதவீதம் மறை முரணொன்று அவதானிக்கப்பட்டது. அதன்படி சபையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கு முடியாமல் போனமையால் அந்த திருத்தங்களையும் சேர்த்து 2024 ஆண்டின் போது முன்னைய ஆண்டுகளின் போது ஏற்பட்ட சிக்கலை குறைத்துக்கொண்டு மிகவும் செயற்திறனுள்ள முறையில் எதிர்பார்த்த செயலாற்றுகையை நெருங்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான சமூக பொருளாதார அபிவிருத்திக்காக வீதிப் பாதுகாப்பு சார்ந்த நிறைவேற்றப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை இனங்கண்டு சபையின் 2022 – 2024 மூன்றாண்டு செயற்பாட்டுத் திட்டத்தின் 05 தூண்களின் கீழ் அந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக செயற்படுத்த வேண்டிய கருமங்கள் அடங்கிய 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கருமங்களின் நிறைவேற்றலின் முன்னேற்றம் மீளாய்வாண்டின் போது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட காரணத்தினால் சபையின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்கும் முன்னேற்றமும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | சபைக்காக நிலைபேறான அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்திருக்காததுடன், 2022 – 2024 ஆண்டுகளுக்கான மூன்றாண்டு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அது வீதிப் பாதுகாப்பு தொடர்பான செயற்படுத்தும் தசாப்தத்திற்கான ஐக்கிய நாடுகளின் வீதிப் பாதுகாப்பு ஒத்துழைப்பினால் திட்டமிடப்பட்ட ஐந்து தூண்களை உடைய நுழைவின் மீது அடிப்படை ஆகின்றது. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவுபடுத்த வேண்டும். |